இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 09-08-2024

# வெல்க வினேஷ் போகத்!

**சோதனையைச் சாதனை ஆக்கிய 'இந்திய மகள்' வினேஷ் போகத். அவருக்கு பதக்கம் கிடைக்காமல் போயிருக்கலாம். ஆனால் அவரை உலகமே கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. இந்தியா சார்பில் போட்டியில் பங்கெடுக்கச் சென்றார். உலக நாடுகளின் பிரதிநிதியாக உயர்ந்து நிற்கிறார்.**

**காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் 3 தங்கம், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 1 தங்கம், ஆசிய சாம்பியன்ஷிப்பில் 88 பதக்கங்கள், உலக சாம்பியன்ஷிப்பில் 2 பதக்கங்கள் வென்ற வீராங்கனை வினேஷ் போகத்.**

வினேஷ் போகத் நடத்திய மல்யுத்தமானது மைதானத்தில் மட்டுமே நடந்தவை அல்ல. இந்தச் சமூகத்துக்கு எதிராக, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக, பாலியல் குற்றவாளிக்கு எதிராக, ஆணாதிக்க கொடூரத்துக்கு எதிராக யுத்தம் நடத்தினார். அதிலும் அவரை வீழ்த்தினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

2023 ஆம் ஆண்டு முழுக்கவே அவரது மல்யுத்தம், ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்கொள்வதாக இருந்தது. 2023 ஜனவரி 18 ஆம் தேதி மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகத், சாக்ஷி மாலிக், பஜ்ரங் புனியா ஆகியோர்பிரிஜ்பூஷன்சரன்சிங்மீதுபலகடுமையானகுற்றச்சாட்டுகளைச் சுமத்தினர். பா.ஜ.க.வின் எம்.பி.யான இவர், இந்திய மல்யுத்த கூட்டமைப்புத் தலைவராகவும் இருக்கிறார். பிரிஜ் பூஷண் சிங், பா.ஜ.க. எம்.பி.யாக இருப்பதால் மட்டுமே காப்பாற்றப் பட்டார். பிரிஜ்பூஷன் சிங்கும், பயிற்சியாளரும், தேசிய முகாமில் பெண் மல்யுத்த வீரர்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதாக வினேஷ் போகத் கதறினார்.

ஊடகங்களில் இது பெரிதாக ஆனதும், வேறு வழியில்லாமல் ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவை அமைத்தார்கள். மூத்த குத்துச்சண்டை வீராங்கனை எம்.சி.மேரி கோம் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, அறிக்கை கொடுத்ததே தவிர, நடவடிக்கைகள் ஏதுமில்லை. எனவே, ஏப்ரல் 21 ஆம் தேதி, பிரிஜ்பூஷன் சிங்குக்கு எதிராக கனாட் பிளேஸ் காவல் நிலையத்திற்குப் புகார் செய்ய மல்யுத்த வீராங்கனைகள் சென்றார்கள். ஆனால் போலீசார் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யவில்லை. ஏப்ரல் 23 ஆம் தேதி மீண்டும் போராட்டம் தொடங்கினார்கள். "ஏன் வழக்குப் பதியவில்லை?" என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது. அதன்பிறகுதான் ஏப்ரல் 30 ஆம் தேதி வழக்கு பதியப்பட்டது.

அப்போது அனைத்து விளையாட்டு வீரர்களையும் நோக்கி, 'கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பிற விளையாட்டு வீரர்கள் ஏன் அமைதியாக இருக்கிறார்கள்?' என்று கேள்வி எழுப்பியவர் தான் வினேஷ் போகத்! அதன்பிறகுதான் ஒரு சிலர் பொதுவெளியில் கேள்விகள் எழுப்பினார்கள். அனைவரையும் இந்தக் கொடூரத்துக்கு எதிராக துணிச்சலாகப் பேச வைத்தவர் வினேஷ் போகத். 'போக்சோ' சட்டத்தில் பதியப்பட்ட வழக்கை வாபஸ் வாங்க வைத்தார்கள். பா.ஜ.க. எம்.பி.யை கைது செய்யாமலேயே வழக்கு விசாரணை நடத்தினார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரிஜ் பூஷனுக்கு பா.ஜ.க. தொகுதி ஒதுக்குவதாக இருந்தது. கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு அவரது மகனுக்கு தொகுதி ஒதுக்கினார்கள். ('பா.ஜ.க.வின் வாரிசு அரசியல் எதிர்ப்பு' இதுதான்!)

இந்த அரசியல் யுத்தத்தில் இருந்ததால் கடந்த ஓராண்டாக வினேஷ் போகத்தால் சரியான பயிற்சி பெற முடியவில்லை. இவ்வளவு தடைகளைக் கடந்துதான் ஒலிம்பிக் சென்றார் வினேஷ் போகத். பாரிஸில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறி சாதனையுடன் பதக்கத்தை ஆகஸ்ட் 6ஆம் தேதி உறுதி செய்தார் வினேஷ் போகத். மகளிருக்கான மல்யுத்தத்தில் 50 கிலோ எடைப்பிரிவுக்கான களம் இது. இதில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். ஒலிம்பிக் மல்யுத்தத்தில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார்.

**ஜப்பானைச் சேர்ந்த யுய் சுசாகியை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார் வினேஷ் போகத். நான்கு முறை உலகச் சாம்பியன் பட்டம் பெற்றவர் இந்த யுய் சுசாகி. எதிலும் இதுவரை தோற்காத வீரர் அவர். இதுவரை 82 பதக்கங்களைப் பெற்ற அவரையே வீழ்த்தினார் வினேஷ் போகத். அதன் பிறகு உக்ரைனைச் சேர்ந்த ஐரோப்பிய சேம்பியன் என்று அழைக்கப்படும் ஆக்சானா லிவச்சையும் வினேஷ் போகத் வீழ்த்தினார். அடுத்து கியூபா வீராங்கனையான கஸ்மன் லோபஸையும் அரையிறுதியில் வீழ்த்தினார் வினேஷ் போகத். இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றார். இறுதிச் சுற்றில் வென்றால் தங்கம் கிடைக்கும், தோற்றால் வெள்ளி கிடைக்கும் என்ற நிலைமை தான் ஆகஸ்ட் 6 ஆம் தேதி இருந்தது. இந்த இடத்தில்தான் வினேஷ் போகத்தை இன்னொரு சதி வீழ்த்தியது.**

50 கிலோ எடைப்பிரிவு இது என்பதால், 50 கிலோவுக்குள் தான் எடை இருக்க வேண்டும். 100 கிராம் எடை அதிகமாக இருக்கிறது என்று சொல்லி தகுதி நீக்கம் செய்து விட்டார்கள். கண்ணுக்குத் தெரியாத சதிதான் இதற்குக் காரணம். 'பிரிஜ் பூஷன் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தன்னை ஒலிம்பிக்கில் பங்கேற்க விடாமல் சதி செய்கிறார்கள்' என்று கடந்த ஏப்ரல் மாதமே குற்றம் சாட்டி இருந்தார் வினேஷ் போகத். 'இவரின் வெற்றியை தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் சதி செய்துள்ளார்கள்' என்று 'இந்தியா' கூட்டணித் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

சுவிட்சர்லாந்தில் உள்ள விளையாட்டுக்கான நடுவர் நீதிமன்றத்தில் வினேஷ் போகத் முறையீடு செய்துள்ளார். தீர்ப்பு என்ன வரப்போகிறது என்று தெரியவில்லை. இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பி.டி.உஷாவிடம் பிரதமர் மோடி சொல்லி இருப்பதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குள் மல்யுத்தப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அவர் செய்துள்ள அறிவிப்பு அதிர்ச்சிக்குரியதாக இருக்கிறது. 'மல்யுத்தப் போட்டி என்னை வென்று விட்டது' என்று சொல்லி இருக்கிறார் வினேஷ் போகத்.

**இல்லை! உலகை வினேஷ் போகத் வென்றுவிட்டார். உலக மக்களின் மனங்களை வென்று விட்டார். மீண்டும் அவர் களத்துக்கு வருவார். வெல்வார். வெல்க!**

அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும் மகத்தான திட்டம்!

# தமிழ்நாட்டு மாணவர்கள் தரணியை வென்றிட 'தமிழ்ப் புதல்வன்' திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – இன்று கோவையில் தொடங்கி வைக்கிறார்!

**கோவை, ஆக. 9- அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீட்டியுள்ள முத்தாய்ப்பான திட்டமாம் 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தின் தொடக்க விழா, இன்று கோவையில் நடைபெறுகிறது.**

**படிக்கும் ஆர்வத்தைப் பெருக்கக்கூடிய பெற்றோர்களின் பொருளாதாரச் சுமைகளைக் குறைக்கவல்ல, உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் பெற வழிவகுக்கக் கூடிய இந்த 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தால், தமிழ்நாடு மேலும் சாதனைகள் படைக்கும் எனின் அது மிகையல்ல!**

**இம்மாபெரும் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (9.8.2024) கோவையில் தொடங்கி வைக்கிறார்.**

இவ்விழா பற்றிய விபரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பெருக்குவதிலும் குறிப்பாக இளைஞர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்புகளை உயர்த்துவதிலும் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறார்கள்.

அரசுப் பள்ளிகளில் படித்துக் கல்லூரிகளில் சேரும் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தால் 3 இலட்சம் மகளிருக்கு மேல் பயன்பெற்றுள்ளனர். அதேபோல, பள்ளிக் கல்வி முடித்து உயர்கல்வியில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்திட, அவர்களுக்கும் மாதம் 1,000 ரூபாய் வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள்.

**இந்திய அளவில் தமிழ்நாட்டில் அதிகம்!**

தமிழ்நாட்டில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் வாயிலாக ஆண்டுதோறும் சராசரியாக 7,72,000 மாணவர்கள் மேல்நிலைக் கல்வியை நிறைவு செய்கிறார்கள்.

இவர்களில் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை இந்திய அளவில் தமிழ்நாட்டில் மிக அதிகமாகும். உயர்கல்வி சேர்க்கையில் இந்தியா முதலிடம் என்னும் மிகப் பெரிய சாதனையைத் தமிழ்நாடு படைத்துள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "கல்வி வெள்ளத்தால் அழியாது; நெருப்பிலும் வேகாது, வேந்தராலும் பறித்திட முடியாது; பிறருக்குக் கொடுத்தாலும் நிறையுமே தவிர, குறைவுபடாது. கள்வரால் திருடவும் முடியாது" என்று கல்வியின் பெருமையைக் கூறுவார்கள்.

**மாணவிகள் பயன்பெறும் 'புதுமைப் பெண்' திட்டம்!**

கல்வியே உயர்ந்த செல்வம். இந்தக் கல்விச் செல்வத்தை ஏழை, பணக்காரர், சாதி, மத வேறுபாடுகள் எதுவும் இன்றி எல்லோருக்கும் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்நாட்டில் உயர்கல்வியை வளர்க்கும் நோக்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் கல்லூரிகளில் சேர்ந்து தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காக, 6ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவிகளுக்கு மாதம்



ரூ.1,000/- வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தை சென்னை அரசு பாரதியார் மகளிர் கல்லூரியில் 5.9.2022 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் மூலம் வழக்கமாகக் கல்லூரிகளில் சேரும் மாணவிகளைவிடக் கடந்த ஆண்டில் கூடுதலாகக் கல்லூரிகளில் சேர்ந்து மகளிர் பயன் பெறுகின்றனர்.

'புதுமைப் பெண்' திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் 2,09,365 மாணவியர்கள் பயனடைந்து வந்த நிலையில், 2023-2024ஆம் நிதியாண்டில் சுமார் 64,231 மாணவிகள் கூடுதலாக இணைந்து 2,73,596 மாணவியர்கள் பயனடைந்துள்ளனர் என்பதே இத்திட்டத்தின் வெற்றிக்கு அடையாளமாகும். புதுமைப் பெண் திட்டம் தொடங்கப்பட்டது முதல் தற்போது வரை சுமார் 3,28,280 மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

**ரூ.370 கோடி நிதி ஒதுக்கீடு!**

இத்திட்டத்தின் கீழ், 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.100.11 கோடியும், 2023-2024ஆம் நிதியாண்டில் ரூ.271.66 கோடியும் மாணவிகளுக்கு மாதம் தோறும் 1,000/- ரூபாய் வீதம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

'புதுமைப் பெண்' திட்டத்திற்கென 2024-2025 ஆம் நிதியாண்டிற்கு ரூ.370.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 2024 முதல் ஜூலை 2024 வரை ரூ.95.61 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சிறப்பு வாய்ந்த திட்டமானது 2024-2025ஆம் கல்வியாண்டு முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டம்!**

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையின்படி, "அரசுப் பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களைச் சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவரின் உயர்கல்விச் சேர்க்கையை உயர்த்திடவும் 'தமிழ்ப் புதல்வன்' எனும் ஒரு மாபெரும் திட்டம் வரும் நிதியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவர்கள் பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்" என இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.




**இன்று கோவையில் முதல்வர் தொடங்கி வைக்கிறார்!**

அந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில் 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தை இன்று (9.8.2024) கோவை மாநகரில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள்.

இத்திட்டத்தின் வாயிலாக, அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் படித்து 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுக் கல்லூரிகளில் சேரும் ஏறத்தாழ 3 இலட்சத்து 28 ஆயிரம் கல்லூரி மாணவர்கள் மாதந்தோறும் ரூ.1,000/- பெற்றுப் பயன் அடைவார்கள்.

இந்தமகத்தானதிட்டத்திற்காக மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு 360 கோடி ரூபாயை இந்த ஆண்டிற்கு அனுமதித்துள்ளது.

பொருளாதார வசதிக் குறைவு உட்பட பல்வேறு காரணங்களால் பள்ளிப் படிப்பிற்குப் பின் உயர் கல்வியைத் தொடர முடியாத நிலையில் இருந்த மாணவர்களுக்கு உயர்கல்வியில் சேர உதவுகிறது.

கல்லூரி செல்லும் மாணவர்களின் உள்ளங்களில் தன்னம்பிக்கையை வளர்க்கிறது, கற்கும் ஆர்வத்தைப் பெருக்குகிறது. பெற்றோரின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கிறது. குடும்பங்களின் வளத்தை மேம்படுத்துகிறது. உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துகிறது. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை இந்திய அளவில் மேலும் உயர்த்துகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புகழை மேலும் மேலும் உயர்த்துகிறது தமிழ்ப் புதல்வன் திட்டம் எனின், அது மிகையன்று!

> **"'தமிழ்ப் புதல்வன்' திட்டம் – கல்லூரி செல்லும் மாணவர்களின் உள்ளங்களில் தன்னம்பிக்கையை வளர்க்கிறது, கற்கும் ஆர்வத்தைப் பெருக்குகிறது. பெற்றோரின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கிறது. குடும்பங்களின் வளத்தை மேம்படுத்துகிறது. உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துகிறது. தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை இந்திய அளவில் மேலும் உயர்த்துகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புகழை மேலும் மேலும் உயர்த்துகிறது தமிழ்ப் புதல்வன் திட்டம் எனின், அது மிகையன்று!"**



மதுரை கிழக்கு வட்டம், திருமோகூர், ஏ.பி. வளையாபதி மகாலில் நடைபெற்ற 'மக்களுடன் முதல்வர்' திட்டம் முகாமை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டு, முகாமில் பட்டா மற்றும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு உடனடி தீர்வாக நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சித் தலைவர் சூரியகலா கலாநிதி, கிழக்கு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் மணிமேகலை, கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரகுபதி, துணைத் தலைவர் பாலாண்டி, ஊராட்சி மன்ற தலைவர்கள் அண்ணாமலை, முருகேஸ்வரி, சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.